CHURCH OF THE

**HOLY FAMILY**

**— KAJANG —**

*கிறிஸ்துவில் அன்பு சகோதர-சகோதரிகளே,*

*பண்பாட்டு மற்றும் சமயக் கொண்டாட்டங்களைக் குறிக்கும் தொடர் விழாக்களையும் விடுமுறையையும் கொண்டாடுவதில் பல்லினங்கள் வாழும் மலேசியா பெருமிதம் கொள்கிறது. தென்னிந்திய மக்களின் பொங்கல் இவற்றில் ஒன்று. தென்னியச் சமூகங்கள் குறிப்பாக தமிழர்கள் மத்தியில் பொங்கல் விழா பண்பாட்டைக் குறிக்கும் உன்னதக் கொண்டாட்டமாக விளங்குகிறது.*

*தமிழர் அல்லாதவர்களுக்கும் நன்கு பழக்கமான பாலும் சக்கரையும் சேர்த்து சமைக்கப்படும் பொங்கல், பண்பாட்டு-சமயக் கூறுகளைக் கொண்டது. வழக்கமாக நான்கு நாள்களுக்கு இது கொண்டாடப்படுகிறது. சில நாள்கள் முதல் சில வாரங்கள் வரை கொண்டாடப்படும், நமது யூதக் கிறிஸ்துவத் தொடர்புடைய பெரும் விழாக்கள் பொங்கல் விழா பிரதிபலிக்கிறது. உளமாற கடவுளுக்கு நன்றிச் சொல்லும் கொண்டாட்டங்களை கைவிட நாம் இன்னும் தயாராக இல்லை என்பதை இது காட்டுகிறது.*

*எதுவும் பயனுள்ளதா என அலசி ஆராய்ந்து பார்க்கும் இக்கால மனிதனுக்கு, சமய-பக்தி முயற்சிகளும் அதனையொட்டிய விடுமுறையும் கால விரயம் என்றும் வீண் என்றும் கருதுவான். ஆனால் கிறிஸ்துவர்களாகிய நமக்கு, யூதர்களின் பாரம்பரியமும் விடுமுறையும் விழா நாள்களும் கடவுளின் கொடை எனக் கருதுகிறோம். செய்யும் தொழிலுக்கு ஓய்வுக் கொடுத்து, எல்லா வல்ல இறைவனிடமிருந்து பெற்ற எல்லா நன்மைக்கும் ஆசிருக்கும் நன்றி கூறி அர்ப்பணம் செய்கிறோம்.*

*யூதர்கள் ஒன்றல்ல மூன்று அறுவடை விழாக்களைக் கொண்டாடினர். அவற்றில் இரண்டை கிறிஸ்துவர்களாகிய நாம் எடுத்துக்கொண்டோம். அவை ஈஸ்தரும் பெந்தக்கோஸ்தும். இந்த விழாக்கள் வெவ்வேறு தானிய வகைகளோடு தொடர்புடையவையாக இருந்தாலும் யூதர்களின் வரலாற்றுப்பூர்வமான விடுதலைப் பயணத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. நல்ல விளைச்சலைக் கொண்டாடுவதோடு, முதற்கனியை ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்கும் திருநாளாக விளங்கியதன. மக்களைக் காத்து, சொல்லொண்ண முறையில் பாதுகாக்கும் கடவுளை நினைவுகூர்ந்து நன்றி நவிலும் நன்னாளாகும்.*

*இன்று, நமது பங்கின் தமிழ் சமூகம் மற்றும் ஏனைய தென்னிந்தியச் சமூகத்துடன் சேர்ந்து, ஓரே திருக்குடும்பச் சமூகமாக இந்த பொங்கல் திருநாளைக் கொண்டாடுவோம்.*

*இனிய பொங்கல் வாழ்த்துகள்!*

*"உன் செல்வத்தைக் கொண்டு அவரைப் போற்று; உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் நிறைந்திருக்கும்; குடங்களில் திராட்சை இரசம் வழிந்தோடும்." நீதிமொழி 3:9-10*

*உங்கள் மேய்ப்பர்கள்,*

*அருட்திரு மைக்கல் ச்சுவா, அருட்திரு பிலிப் ச்சுவா, அருட்திரு பொனவேஞ்சர் இராயப்பன்*
*பொங்கல் 2022* *பொது காலத்தின் இரண்டாம் ஞாயிறு*